விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 283 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 11 புதன்கிழமை (28.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலையில் பாரிய புரட்சி வெடிக்கும்

## உதய கம்மன்பில அபாய எச்சரிக்கை



(கொழும்பு)
இலங்கையில் பஞ்ச சூழ்நிலையை எதிர்நோக்கும் மக்களால் எதிர்காலத்தில் பாரியதொரு போராட்டம் முன்னெடுக்கப்படும் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் அதிகரிக்கும் உணவு மற்றும் மருந்துப் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக கடந்த ▶15

# மின் வெட்டு நேரம் அதிகரிக்கப்படலாம்

## நுரைச்சோலை மின்பிறப்பாக்கி செயலிழந்தது

(கொழும்பு)
நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி செயலிழந்துள்ளது.

இதனால் நாளாந்த மின்வெட்டு நேரத்தை அதிகரிக்க நேரிடும் என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி ▶15

# உணவுப் பாதுகாப்புக்கு அமெரிக்கா ஆதரவு

(கொழும்பு)
இலங்கையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலையான விவசாயத்திற்கு ஆதரவு வழங்கப்படும் என ரோமில் உள்ள ஐ.நா உணவு மற்றும் விவசாய ▶15

## முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைக்க மாட்டேன்

# நெருக்கடி நிலைமைக்கு தீர்வு கண்டே தீருவேன்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



*(கொழும்பு)*
**முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைக்க மாட்டேன். நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு கண்டே தீருவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஆளும் தரப்பு முக்கியஸ்தர்களுடன் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எனக்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் எதிர்வரும் நாட்களில் பெரும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க எதிரணியினரும் அவர்களின் ஆதரவாளர்களும் திட்டமிட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்து ▶15

### ஆசிய அபிவிருத்தி வங்கி

# இலங்கைக்கு மேலும் உதவி

(கொழும்பு)
ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கைக்கு மேலும் நிதி உதவி வழங்கத் தயாராக உள்ளதாக வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா, வங்கியின் வருடாந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ▶15

# வடக்கு மீனவர்களின் பிரச்சினை தொடர்பில்

## இந்திய துணைத்தூதுவருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இந்திய துணைத் தூதுவருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. ▶15



# அரசியலமைப்பில் தலையீடு செய்ய உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை

## சட்டமா அதிபர் நீதிமன்றில் அறிவிப்பு

(கொழும்பு)
அரசியலமைப்புக்கு அமைய, அரச நிதியை முகாமைத்துவம் செய்யும் முழு அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது என்றும் அதில் தலையிட உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்றும் சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

முறையற்ற நிதி முகாமைத்துவத்தினால் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி தொடர்பில் ஆராய குழுவொன்றை நியமிக்குமாறு அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பிரதம நீதியரசர் ▶15

# சட்டம் மூலம் அரசு மக்களை அடக்குகின்றது

## ஜி.எல். பீரிஸ்

(கொழும்பு)
64 வருட கால சட்டத்தை மக்கிய பெட்டியில் இருந்து எடுத்து மக்களை ஒடுக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் பயன்படுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சொந்த மக்களை அடக்கும் திட்டத்தின் ▶15

# ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)
பொருட்கள் ஏற்றுமதி மூலமான வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 10.24 வீதத்தினால் அதிகரித் ▶15

# சமூக வலைத்தளங்களில் கருத்துப் பகிரமுடியாது

## அரச ஊழியர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
ஸ்தாபனச் சட்டத்தின் கீழ் உள்ள விதிகளைப் பின்பற்றாமல் சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளிப்படுத்தும் அரச பணியாளர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட புதிய சுற்றறிக்கையில் இந்த ▶15

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
30 . 09 . 1964

இறப்பு
26 . 09 . 2022

# பழனி சிறிதரன்

தும்பளை வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பழனி சிறிதரன் நேற்று முன்தினம் (26.09.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2022) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தும்பளை வீதி,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்
077 522 7525

(C-4991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் அரசிற்கெதிராக ஜப்பானில் ஆர்ப்பாட்டம்

**(டோக்கியோ)**
**ஜப்பானில் வாழும் இலங்கையர்கள் ரணில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

நேற்று முன்தினம் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இலங்கை ஜப்பான் ஒன்றியம் என்ற குழுவினரால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு எதிராக முன்னிலை சோசலிச கட்சியினரின் ஆர்ப்பாட்டம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஜப்பான் சென்றடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தியாகி திலீபனை நினைவு கூர்ந்தது தமிழகம்



(சென்னை)
தியாகி திலீபனின் 35 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் தமிழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழக அரசியல் கட்சியான நாம் தமிழர் கட்சி ஏற்பாட்டில் அக்கட்சியின் தலைவர் சீமான் தலைமையில் சென்னையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (நி)

# 3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் நிதியுதவி இலங்கைக்கு வழங்குகிறது ஐக்கிய இராச்சியம்

(கொழும்பு)
ஐக்கிய இராச்சியத்தினால் இலங்கைக்கு 3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் நிதியை மனிதாபிமான அடிப்படையில் வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இதன்படி குறித்த மனிதாபிமான அடிப்படையிலான நிதியானது பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறுவோர், கர்ப்பிணிப் பெண்கள் உள்ளிட்டோருக்கு பகிர்ந்தளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 2 ஆயிரம் பேக்கரிகள் மூடல் 1 இலட்சம் பேர் வேலையிழப்பு

(கொழும்பு)
மா மற்றும் முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதும் சுமார் 2,000 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இதனை தெரிவித்துள்ளது.

பேக்கரி தொழிலுக்கு தேவையான பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக கிராமப்புறங்களில் உள்ள அனைத்து பேக்கரிகளும் மூடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக இத் தொழிலை நம்பியுள்ள சுமார் 100,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)


## மணிவிழா நாயகியின் சேவை நலன் பாராட்டு

(மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் ஆசிரியை)



திருமதி. ஸ்ரீரமணி அழகேந்திரன்

Best Wishes

சேவை விபரம்

| | |
|---|---|
| மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | 21.06.1989-31.12.2002 |
| மு/புதுக்குடியிருப்பு R.C | 01.01.2003-06.07.2006 |
| மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | 07.07.2006-20.02.2014 |
| மு/இரணைப்பாலை R.C | 21.02.2014-01.05.2014 |
| மு/புதுக்குடியிருப்பு R.C | 02.05.2014-25.05.2014 |
| மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | 26.05.2014-03.01.2016 |
| மு/வேணாவில் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலயம் | 04.01.2016-22.01.2017 |
| மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | 23.01.2017-இன்று வரை |

எமது கல்லூரியில் கடமையாற்றி மணி விழாக்காணும் நாயகி எங்கள் விஞ்ஞான ஆசிரியர் திருமதி. ஸ்ரீரமணி அழகேந்திரன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். எமது கல்லூரியின் பழைய மாணவியாகவும் விஞ்ஞானபாட இணைப்பாளராகவும் பகுதித் தலைவராகவும் கடமையாற்றி இன்று தனது அறுபதாவது அகவையில் மணி விழாக் காணும் நாயகி தனது ஓய்வுக் காலத்தில் குடும்பத்தாருடன் ஆரோக்கியமாக வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு.
(C-4990)


# க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)
க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு மாணவர்களின் பெற்றோர்கள் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரண்டாவது தடவையாக பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வருடம் டிசெம்பர் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சையை நடத்துவதன் மூலம் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட 6 மாதங்கள் ஆனதாகவும் 3 மாதங்களில் மீண்டும் அதே பரீட்சையை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே க.பொ.த உயர்தரப் பரீட்சையை 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படமாட்டாது மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)
நுரைச்சோலை அனல்மின் நிலையம் புனரமைக்கப்படும் வரை தனியார் ஆலைகளில் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கா சன விஜேசேகர தெரிவித்துள்ளா

இந்த விடயம் தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், இதன் காரணமாக மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிநுட்பக் கோளாறு காரணமாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் பழுதடைந்தடைந்துள்ளமையால், நாடளாவிய ரீதியில் மின்வெட்டு அமுலாகும் காலம் அதிகரிக்கப்படவுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு ஆண்டில் அதிக வெற்றி

# பாகிஸ்தானின் சாதனையை முறியடித்த இந்திய அணி



ஒரு ஆண்டில் அதிக வெற்றி பெற்ற அணி என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது.

பாகிஸ்தான் அணி 2021 ஆம் ஆண்டில் 20 வெற்றி பெற்று முதலிடத்தில் இருந்தது. ஐதராபாத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற தன் மூலம் இந்திய அணி சாதனை படைத்தது.

இந்த ஆண்டில் 20 ஓவர் கிரிக்கெட்டில் இந்தியா பெற்ற 21 ஆவது வெற்றி இதுவாகும். இதனால் ஒரு ஆண்டில் அதிக வெற்றி பெற்ற அணி என்ற சாதனையை இந்தியா படைத்தது.

இதற்கு முன்பு பாகிஸ்தான் அணி 2021 ஆம் ஆண்டில் 20 ஓவர் கிரிக்கெட்டில் 20 வெற்றி பெற்று முதலிடத்தில் இருந்தது. அதை இந்தியா முறியடித்தது. இந்தியா இந்த ஆண்டில் இதுவரை 20 ஓவர் கிரிக்கெட்டில் 29 ஆட்டத்தில் விளையாடி 21 இல் வெற்றியை பதிவு செய்துள்ளது. (4)

## சர்வதேச கிரிக்கெட்டில் இந்தியாவுக்காக

# அதிக ரன்கள் குவிப்பு

## டிராவிட்டை முந்தினார் கோலி



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடியது.

இரு அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி போட்டி கடந்த 25 ஆம் திகதி நடந்தது.

இதில் முதலில் பட் செய்த அவுஸ்திரேலியா 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்கு 186 ரன்கள் எடுத்தது. பின்னர் களமிறங்கிய இந்தியா விராட் கோலி, சூர்யகுமார் யாதவின் அதிரடியால் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் முன்னாள் கப்டன் விராட் கோலி 48 பந்துகளில் 63 ரன்கள் அடித்தார். இதன்மூலம் விராட் கோலி புதிய சாதனை ஒன்றை படைத்தார்.

இந்திய அணிக்காக அதிக ரன்கள் அடித்தவர்கள் பட்டியலில் விராட் கோலி, ராகுல் டிராவிட்டை பின்னுக்குத் தள்ளி 2 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இந்தப் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர் முதல் இடத்தில் உள்ளார். (4)


## பெறுகை அறிவித்தல்

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.

02. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 16.00 மணிவரை 28.09.2022 ஆம் திகதியிலிருந்து 11.10.2022 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 28.09.2022 தொடக்கம் 12.10.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பிற்கபல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/= (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்களினை பூரணப்படுத்தி 12.10.2022 ஆம் திகதி 15:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேச சபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட அல்லது பிந்திக் கிடைக்கும் பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

06. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.

| தொ. இல | பெறுகை விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம். | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (ரூ.ச.) | வைப்பு செல்லுபடியாகும் காலம் |
| 1 | Desk Top Computer with UPS | 05 Nos | NP/14/41(13)/3/1/15/ Desk Top/2022 | 01 மாதம் | 10,000.00 | 03 மாதம் (29.12.2022) |
| 2 | Executive Chair | 40 Nos | NP/14/41(13)/3/1/15/ Ex.Chair /2022 | | 5,000.00 | 03 மாதம் (29.12.2022) |
| 3 | Fixing of Solar Street Light | 15 Nos | NP/14/41(13)/3/1/15/ Solar Light/2022 | | 5,000.00 | 03 மாதம் (29.12.2022) |

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**பிரதேச சபை பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

(C-4093) 28.09.2022


# அபுதாபி ரி-10 இலங்கை வீரர்கள் 7 பேர் ஒப்பந்தம்



ஆறாவது அபுதாபி ரி-10 தொடரில் விளையாட ஏழு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள் ளனர்.

இதன்படி, வனிந்து ஹசரங்க - நோர்தன் வோரியஸ் அணிக்காகவும் தசுன் ஷனக - சென்னை பிரேவ்ஸ் அணிக்காகவும் பானுக ராஜபக்ஷ - சென்னை பிரேவ்ஸ் அணிக்காகவும் சாமிக்க கருணாரத்ன - சாம்ப் ஆர்மி அணிக்காகவும் துஷ்மந்த சமீர - நோர்தன் வோரியஸ் அணிக்காகவும் மகேஷ் தீக்ஷன - சென்னை பிரேவ்ஸ் அணிக்காகவும் மதீஷ பத்திரன - பங்களா டைகர்ஸ் அணிக் காகவும் விளையாடுகின்றனர்.

எட்டு அணிகள் பங்கேற்கும் ஆறாவது அபுதாபி ரி-10 தொடர், நவம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (4)

# ஐ.நா பொதுச் செயலாளருடன் அலி சப்ரி சந்திப்பு

## பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஆராய்வு



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் 77 ஆவது அமர்வில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றுள்ள வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரஸ்ஸை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள், பொருளாதார ரீதியில் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் அமைச்சர் அலி சப்ரி தெளிவுபடுத்தியுள்ளார்.

தற்போதைய சவால்களை சமாளிக்க இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கைக்கு மேலும் ஐ.நாவின் உதவிகளை பெற்றுக்கொள்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்

## நாளாந்தம் 100 சம்பவங்கள் இடம்பெறுவதாக பொலிஸார் தகவல்

(கொழும்பு)

**நாட்டில் பொருளாதார நெருக்கடியால் மக்கள் சிக்கித் தவித்துவரும் நிலையில் இக்காலப்பகுதியில் வீடு உடைப்பு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

வீடு உடைப்பு, திருட்டு, கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் வாகனங்களைக் கொள்ளையிடுதல் போன்ற பாரிய சம்பவங்களுடன் சிறு திருட்டு உட்பட நாளாந்தம் 100 சம்பவங்கள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் குறித்து நாடு முழுவதுமுள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பெரும்பாலும் போதை வஸ்துக்கு அடிமையானவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# அதி உயர் வலய பிரகடனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

கொழும்பின் சில பகுதிகளை அதியுயர் வலயங்களாக அறிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தின் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தை சட்டத்தரணிகள், சிவில் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவர்கள் உள்ளிட்டோர் ஒன்றிணைந்து முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் போராட்டக்காரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறைக்கும் எதிர்ப்பு வெளியிட்டிருந்ததுடன் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கும் கண்டனம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கண்ணீர் அஞ்சலி

குப்பிழான் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு மயிலங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட

அமரர். **கணேஷ் அழகம்மா (அழகி)**

பிறப்பு- 25-07-1942

இறப்பு-26-09-2022



அமைதியான புன்சிரிப்பும்
ஆழ்ந்த சிந்தனையும் கொண்டு
கனிவு மொழி பேசும்
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன்முகமும்
மறைந்ததேனோ?
கண்களெல்லாம் கடலாய்ப் பொங்க
கலங்க விட்டு எங்கு சென்றீர்கள்?
அமைதியாய் மரணத் திரையினிலே
மௌனமாய் மறைந்ததேனோ?
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!! (1297)

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.


# பொதுஜன பெரமுன மீண்டும் கட்டியெழுப்பப்படும்- நாமல்

(கொழும்பு)

எமது அரசாங்கத்தில் பல சிறந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் மக்களுக்காக எடுக்கப்பட்ட சில முடிவுகள் தவறானவை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் மக்களுக்காகச் சிந்தித்து எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் தவறானவை எனவும், அந்தத் தவறுகளை நிவர்த்தி செய்து மீண்டும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை எமது அரசாங்கத்தில் பல சிறந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. உதாரணமாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 350 ரூபாவுக்கு மக்களுக்கு உரம் வழங்கினார்.

ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ, உர இறக்குமதியை நிறுத்தி இயற்கை விவசாயத்தில் கவனம் செலுத்த தீர்மானித்தார் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி)

# இராசிபலன்

28.09.2022
புரட்டாதி 11, புதன்கிழமை
திருதியை பின்னிரவு 2.19 மணிவரை

சித்திரை முற்பகல் 7.56 மணிவரை
சுபநேரம் - 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் -12.02-1.32 மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி

**வளவன்**

**மேஷம்** மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், உடல் நலன் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர், கௌரவமான நாள்.

**கடகம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வரலாம்.

**துலாம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும், கௌரவமான நாள்.

**ரிஷபம்** உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**கும்பம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வழிபாடு சிறப்பினைத் தரும்.

**மிதுனம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, உறவினர், நண்பர்களிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

பாறையைக் கூட பிளக்கும் ஆற்றல் உயிருள்ள வேருக்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மன்றினால் நிராகரிப்பு

**(நெளுக்குளம்) —**


**அரசியல் கைதிகள் மூவரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நேற்று வவுனியா மேல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.**

2009 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கணேசன் தர்சன், சுலக்சன், திருவருள் ஆகியோரின் வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதிகளான மா. இளஞ்செழியன், இராமகமலன் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே 2013 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு தொடர்பான தொடர் விளக்கத்திற்காக எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வழக்கு திகதியிடப்பட்டுள்ளது.

குறித்த அரசியல் கைதிகளுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி அன்டன் புனிதநாயகம் ஆஜராகியிருந்தார்.

குறித்த அரசியல் கைதிகளுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் ரோகான் ரத்வத்த துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியதாக சர்ச்சை ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (4-299)



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி பாடசாலை அதிபர் செ.இளங்கோ தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் பிரதம விருந்தினராகவும் முன்னாள் அதிபரும் தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.இந்திரகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.



பாஷையூர் பங்கில் முன்னெடுக்கப்பட்ட அன்பிய ஆண் டின் நிறைவு நாள் நிகழ்வு அண்மையில் பங்குத்தந்தை அருட்திரு ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. அன்றையதினம் காலைத் திருப்பலியை யாழ்.மறைமாவ ட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி மில்பர் வாஸ் ஒப்புக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து மாலையில் கலை நிகழ்வுகளுடன் தேவசகாயம்பிள்ளை நாட்டுக் கூத்தும் மேடையேற்றப்பட்டது.

# கருஜெயசூரிய யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவரும் முன்னாள் சபரநாயகருமான கருஜெயசூரியாஎதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்வார். இதன்போது யாழ்ப்பாணத்தில் சிங்கள கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்விலும் கலந்து கொள்ள உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-104)



# நெல்லியடியில் 60 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 60 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி முள்ளிக் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக நெல்லியடி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய போது, காட்டுப்பகுதிக்குள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு இருந்த 35 வயது மற்றும் 50 வயதுடைய இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 60 லீற்றர் கசிப்பினையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(4-33-60)

# சீரடி சாயிபாபா அவதார தினமும் சாயி சத்சரித வாசிப்பு நிறைவும்

(குப்பிழான்)

சீரடி சாயிபாபா அவதார தினமும் சாயி சத்சரித வாசிப்பு நிறைவும் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெற உள்ளது.

நிகழ்வில் சீரடி சாயி அஷ்டோத்திரம், சீரடி சாயி சத்சரித வாசிப்பும் நிறைவும், ஹோமம், பஜனை, மங்கள ஆராத்தி என்பன இடம்பெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் அன்பர்களுக்கு மதிய போசனம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-18)

# கடல் மணல் அகழ்வு

## வல்லிபுரத்தில் இளைஞர் கைது

(குப்பிழான்)

அனுமதிப்பத்திர முன் நிபந்தனைகளை மீறி வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் கடல் மணல் அகழ்வில் ஈடுபட்ட இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த 31 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சிரேஷ்ட பிரஜைகள் நலனோன்பு நிலைய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை பிரதேச முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சிரேஷ்ட பிரஜைகள் நலனோன்பு நிலைய திறப்புவிழாவானது எதிர்வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மல்லாகம் நீதிமன்ற முன் ஒழுங்கையில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் முருகன் ஆலயத்தில்

# விஜயதசமியை முன்னிட்டு தேவாரம்,பொழிப்பு திருப்பணி

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் தினமும் தேவாரம் மற்றும் பொழிப்பு திருப்பணி எதிர்வரும் விஜயதசமி அன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

தினமும் மாலை 5 மணி பூஜையைத் தொடர்ந்து வழிபாடுகளை "நல்லூரில் நாளுக்கோர் தேவாரம்" என்ற இந்த திருப்பணி முன்னெடுக்கப்படும் என்று தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் ஆஸ்தான ஓதுவார் விஸ்வபிரசன்னா சிவாச்சாரியார் தினமும் ஒரு தேவாரம் ஓதி பொழிப்பையும் வழங்குவார். தமிழாலும் இசையாலும் பக்தியை வளர்ப்பதற்கான நோக்கமாக இந்த திருப்பணி முன்னெடுக்கப்படுவதாக நல்லூர் தேவஸ் தானம் சுட்டிக்காட்டியுள்ளது.(4-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தாயகமெங்கும் நினைவேந்தல் நிகழ்வு

# கைகட்டி வேடிக்கை பார்க்கும் அரசு

## சரத் வீரசேகர சாடல்



**(கொழும்பு)**

**"பயங்கரவாதியான திலீபனை நினைவேந்தி வடக்கு, கிழக்கில் தமிழர்கள் நிகழ்வுகளைப் பகிரங்கமாகப் பெருமெடுப்பில் நடத்துகின்றனர். ஆனால், அதற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்காமல் அரசும் படையினரும் பொலிஸாரும் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர்" என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிரிழந்தாலும் இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவர் என்பதை அரசு மறக்கக் கூடாது."

தமிழினத்தின் விடிவுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரு நாட்கள் நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் இம்முறை மக்கள் கூடுதல் அக்கறை காட்டி தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை எழுச்சிபூர்வமாக நடத்தினர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கருத்து வெளியிட்ட முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, "திலீபனின் இந்த நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியின் கருத்து என்ன?

வடக்கு, கிழக்கில் இம்முறை திலீபனின் நினைவேந்தலைப் பெருமெடுப்பில் நடத்த யார் அனுமதி வழங்கியது? இது தொடர்பில் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டதா? பயங்கரவாதிகளின் மோசமான செயல்களால்தான் எமது நாடு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சின்னாபின்னமாகியது.

மீண்டும் அதே நிலைமை ஏற்பட அரசு விரும்புகின்றதா?

எதிர்வரும் காலங்களில் வடக்கு, கிழக்கில் புலிப் பயங்கரவாதிகளை நினைவேந்தும் நிகழ்வுகளுக்கு அரசு தடை விதிக்க வேண்டும்.

இது தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி உடனடியாக வெளியிட வேண்டும்" என சரத் வீரசேகர தெரிவித்தார். (நி)


## சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்




**திரு. மாணிக்கம் சிவனேசன் (உபஅதிபர்)**

(பயிற்றப்பட்ட விஞ்ஞானம்– SLTS -I)

(யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்)

சேவை விபரம்

| | |
|---|---|
| 21.10.1988- 19.01.1992 | - யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி. |
| 20.01.1992-31.12.1993 | -பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை |
| 01.01.1994-04.03.1997 | -யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் |
| 05.03.1997- 08.01.2006 | -யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| 09.01.2006-11.01.2009 | -யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை |
| 12.01.2009-28.12.2021 | -யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் |

அகவை அறுபதில் உபஅதிபர் பணியிலிருந்து ஓய்வு பெறும் எமது உப அதிபரின் ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்- பாடசாலை நலன்புரிக்கழகம்
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1974 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 2 1/2 சூரி 5 செவ் 9 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்:B.Eng/ஆசிரியர் லண்டன்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/6279 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:- சூரி, செவ் 1 இல்<br>உயரம்:175 cm<br>தகைமை/தொழில்: BA விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: சூரி, செவ் குறிப்புள்ளவர் விரும்பத்தக்கது.<br>தொ.இ:G/7879 |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 31 சூரி 8 செவ் 7 இல்<br>உயரம்:5' 4'<br>தகைமை/தொழில்:BBA,AAT,CHARTERED ACCOUNTING<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6302 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: சூரி 8 செவ் 7 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்:தாதி/பிரான்ஸ் குடியுரிமை<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/8505 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: 83 சூரி 4 செவ் 1 இல்<br>உயரம்:5' 8"<br>தகைமை/தொழில்:A/L கடை<br>எதிர்பார்ப்பு:நல்ல பண்பான பெண்<br>தொ.இ: B/6304 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 27 ¼ சூரி , செவ் 3 இல்<br>உயரம்:4' 11"<br>தகைமை/தொழில் O/L/சிகூ.க.ச/கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்<br>தொ.இ:G/8511 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 14 1/2 சூரி, செவ் 5 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: பலசரக்கு கடை (சொந்தம்)<br>தொ.இ: B/6314 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி 1<br>கி.பா: 32 சூரி, செவ் 11 இல்<br>உயரம்:5' 1"<br>தகைமை/தொழில்:HNDA முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/7922 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய பாடசாலைக்குள் ஆயுததாரி வெறியாட்டம்

# 11 மாணவர்கள் உட்பட 17 பேர் சுட்டுக்கொலை!

**(மொஸ்கோ)**

**ரஷ்யாவில் பாடசாலை ஒன்றுக்குள் புகுந்து அப்பாடசாலையின் பழைய மாணவன் வெறித்தனமாக நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 17 பேர் உயிரிழந்தனர். அத்துடன் 24 பேர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்களில் 11 சிறுவர்கள் அடங்குவதாக ரஷ்ய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.**



பாடசாலைக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய பின்னர் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு இறந்த ஆயுத தாரியின் செயலை பயங்கர வாத நடவடிக்கை என ரஷ்ய ஜனாதிபதி மாளிகை யான கிரெம்ளின் விமர்சித் துள்ளது.



தலைநகர் மொஸ்கோ வில் இருந்து கிழக்கே உட்முர்டியா பகுதியில் 960 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இஷெவ்ஸ்கில் உள்ள பாடசாலையிலேயே நேற்று முன்தினம் திங்கட் கிழமை காலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

சம்பவம் குறித்து குற்றவியல் விசாரணை ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடூர படு கொலை சம்பவத்தில் ஈடு பட்ட ஆயுததாரி சடலமாக மீட்கப்பட்ட போது அவரது உடையில் நாஜி சின் னங்கள் காணப்பட்டதாக விசாரணையாளர்கள் கூறு கின்றனர்.

பெரிய குற்றங்களைக் கையாளும் ரஷ்யாவின் விசாரணைக் குழு, குற்றவாளியின் சந்தேகத்திற் குரிய நவ-நாஜி தொடர்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளது. (நி)

## இத்தாலியின் முதல் பெண் பிரதமர்

# ஜார்ஜியா மெலோனி





(வத்திக்கான்)

இத்தாலியின் முதல் பெண் பிரதமராக ஆகும் ஜார்ஜியா மெலோனி இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நாட்டின் தீவிர வலது சாரி அரசாங்கத்தை வழி நடத்த உள்ளார்.

இத்தாலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலில் கன்சர்வேடிவ் கூட்டணிக்கு தலைமை தாங்கி போட்டியிட்ட நிலையில் வெற்றி பெற்ற பின்னர், இத்தாலியின் முதல் பெண் பிரதமராக 45 வயதான ஜார்ஜியா மெலோனி இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஏற்பட உள்ள முதல் வலதுசாரி அரசாங்கத்தின் தலைவராகப் பதவியேற்க உள்ளார். (நி)

# வணிக வளாகக் கட்டடத்தில் தீப் பரவல் 7 பேர் தீயில் கருகி உயிரிழப்பு

## தென்கொரியாவில் துயரம்



(சியோல்)

தென்கொரியாவின் டேஜி யோன் நகரில் உள்ள வணிக வளாகத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் சியோலில் இருந்து 168 கிலோமீற்றர் தொலைவில் உள்ள டேஜியோனில் உள்ள வணிக வளாக கட்டடத்தில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை.

தீயணைப்பு பணியில் 500 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் மற்றும் 90 வாகனங்கள் ஈடுபட்டதாக யுசியோங் தீயணைப்புத் துறையின் தீயணைப்பு அதிகாரி லீ சியுங்-ஹான் தெரிவித்தார்.

தீ விபத்து நேரிட்ட சமயத்தில் வணிக வளாகத்தில் வாடிக்கையாளர்கள் யாரும் இல்லாததால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# உக்ரைன் மீது அணு ஆயுதங்களை பயன்படுத்தினால் ரஷ்யா பேரழிவை சந்திக்கும்-பைடன் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

உக்ரைன் மீது அணு ஆயுதங்களை பயன்படுத்தினால் ரஷ்யா பேரழிவை சந்திக்கும் என்று அமெரிக்கா மீண்டும் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா கடந்த 7 மாதங்களாக போர் தொடுத்து வருகிறது. இந்த சூழலில் உக்ரைன் மீதான போரை மேலும் தீவிரப்படுத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முடிவு செய்துள்ளார்.

அதன்படி உக்ரைனில் சண்டையிட சுமார் 3 லட்சம் ரஷ்யர்களை அணிதிரட்ட அண்மையில் உத்தரவு பிறப்பித்தார்.

அதோடு போரில் மேற்கத்தேய நாடுகளால் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் உக்ரைன் மீது அணு ஆயுதங்களை பயன்படுத்துவதை தவிர்க்க முடியாது எனவும் புடின் எச்சரித்துள்ளார்.

இதனிடையே உக்ரைனில் ரஷ்யா ஆக்கிரமித்து வைத்துள்ள 4 பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைப்பது குறித்த பொது வாக்கெடுப்பு நிறைவு பெற்றதும் ரஷ்ய துருப்புக்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் உக்ரைன் மீது அணு ஆயுதங்களை பயன்படுத்தினால் ரஷ்யா பேரழிவை சந்திக்கும் என அமெரிக்கா கடுமையாக எச்சரித்துள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## செங்தும்பை/ரணதும்பை

**Botanical Name- Leonotis nepetifolia**
**Family- Lamiaceae**





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

செடி இனத்தைச் சேர்ந்தது. மழைகாலங்களில் அதிகம் பரம்பல். நீர் செழிப்பான இடங்களில் அதிகம் வளரும். 10 அடி வரை வளரக்கூடிய செடியாகும். இதனுடைய தண்டின் ஓரவிளிம்புகள் மழுங்கிக் காணப்படும்.

தண்டுகளில் சீரான இடைவெளிகளில் கணுக்கள் காணப்படும். ஒவ்வொரு கணுவிலும் முடிமுடியான அமைப்பும் அதிலுள்ள ஒவ்வொரு பூவுறையும் முட்கள் போன்று கூர்மையாகக் காணப்படும். இந்த ஒவ்வொரு உறையிலும் அடர்ந்த செந்நிற பூக்கள் காணப்படும். இலைகளின் ஓரவிளிம்புகள் ரம்பை போன்று காணப்படும்

இலை இதய வடிவில் நுனி கூராக உள்ளது. சமாந்தர இலையமைப்பு. வெயில் காலத்தில் இலைகள் உதிர்ந்து தண்டுடன் இதன் முடிச்சான பூக்கள் மட்டுமே காய்ந்து காணப்படும்.

இதன் விதைகள் மிக நுண்ணியவையாகவும் உறுதியானதாகவும் காணப்படும். இதன் பூக்களில்தேன்மிகவும்சுவையானது. இதனுடைய பூக்களை காய், கறிகளுடன் சேர்த்து சமைத்துச் சாப்பிடலாம். உடலுக்கு குளிர்ச்சியையும் வன்மையையும் கொடுக்கக் கூடியது.

பொதுவாக இச் செந்தும்பை மூலிகையானது இருமல், தும்மல், பீனிசம், தோல் நோய்கள், பாம்புக்கடி, சிறுநீரகக் கோளாறுகள் போன்ற பல நோய்நிலைமைகளில்பயன்படுகிறது. மேலும் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்ற நிலைமைகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

தோலின் ஒவ்வாமையால் ஏற்படும் அலட்சிகளை நீக்கக்கூடியது. இரத்தத்தை சுத்திகரிக்கக் கூடியது.

தோல் அலட்சி, புண்கள், வெட்டுக்காயம் போன்ற நிலைமைகளில் இதன் இலைகளைச் சேகரித்து நன்கு கழுவி அம்மியில் வைத்து பட்டுப்போல் அரைத்து பற்றிட மேற்படி நோய் நிலைமைகள் ஆறும்.

எவ்விதமான நாட்பட்ட தோல் நோய்களாக இருந்தாலும் இதன் இலைகளைச் சேகரித்து இலைகள் ஒரு பங்கிற்கு 8 பங்கு நீர் விட்டு 1/8 பங்காக வற்றக்காய்ச்சி இளஞ்சூடான நிலையில் தொற்றான தோலை கழுவி விட இலகுவில் ஆறும்.

பாம்புக் கடிக்கு செந்தும்பை செடியினை வேருடன் பிடுங்கி நன்கு கழுவி அம்மியில் வைத்து அரைத்து பாம்பு கடித்த கடிவாயிற்கு பற்றிட்டுக் கொண்டு 5 கிராம் அளவு உள்ளுக்கு காலை, மாலை எடுத்து வர விஷங்கள் இறங்கும். அல்லது செந்தும்பையின் வேரை மட்டும் சேகரித்துக் கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து, அரித்து 2 கிராம் அளவு காலை, மாலை எடுத்து வந்தாலும் விஷக் குணங்கள் இறங்கும்.

வீக்கம், கண்டல்களுக்கு இதன் இலைகளை நன்கு கழுவி அரைத்து பற்றிட வீக்கம், கண்டல் குறையும்.

இதனுடைய தண்டு ஒரு துண்டு, இலைகள் 10, வேர் ஒன்று தட்டி ஒரு மண்சட்டியில் போட்டு ஒரு லீற்றர் நீர் விட்டு1/2 லீற்றராக வற்றக்காய்ச்சி 100 மில்லி அளவு தினமும் ஒரு வேளை அருந்தி வர விஷக்கடி, தோல் தொற்றுகள் போன்றன நீங்கும். மூல நோயிற்கு பயன்படுத்தலாம். இதன் இலைகளை உலர்த்தி சுருட்டுப்போல் தயாரித்து புகைப்பிடித்து வர ஆஸ்துமா குணமாகும். ஆனால் இதன் இலைகளை கர்ப்பிணிப் பெண்கள் முதல் ஐந்து மாதங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.

ஏனெனில் கருச்சிதைவை ஏற்படுத்தலாம். இதனுடைய விதைகள் காற்று மூலம், நீரின் மூலமும் பரவி இச் செந்தும்பையின் இனவிருத்திக்கு உதவுகிறது.

செந்தும்பை இலைகள் ஒரு தேக்கரண்டி, சின்னச்சீரகம், 4,5 மிளகு தட்டிச் சேர்த்து 200 மில்லி நீர் விட்டு 100 மில்லியாக வற்றக்காய்ச்சி ஒரு சிறு வேர் அதிமதுரம், சிறிதளவு தேன் சேர்த்து அருந்திவர தொண்டைக் கரகரப்பு, இருமல், சுவாசத் தொற்றுக்கள் தீரும். செந்தும்பை பூக்களைச் சேகரித்து முப்பது பூக்களை எடுத்து 1/4 தேக்கரண்டி ஓமம் சேர்த்து சிறதளவு நல்லெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி வடித்து தலைக்குத் தேய்த்து வர ஒற்றைத் தலை வலி, தலைப்பாரம் நீங்கும்.

செந்தும்பை இலைகளையும் அதன் பூக்களையும் சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து உடம்பு முழுவதும் பூசி ஒரு மணி நேரம் கழித்து கஸ்தூரி மஞ்சளை அரைத்து பூசி தோய்த்து குளித்து வந்தால் சிரங்கு, சொறி, தோல் அலட்சி போன்றன நீங்கும்.

இச் செந்தும்பையின் பரம்பலை மழைகாலத்தில் வாய்க்கால் ஓரங்களில் சேகரிக்கக் கூடியதாக இருக்கும்.

தும்பை இலைகளை நல்லெண்ணெயில் வதக்கி புளி குறைவாக சேர்த்து உள்ளி, மிளகு, சீரகம், மல்லி சேர்த்து ரசம் வைத்து அருந்திவர சளித் தொல்லைகளும் நீங்கும்.

# மனைத்தோட்டமும் மனைப்பொருளாதாரமும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நம்நாட்டு பொருளாதார சரிவென்பது நாட்டிலுள்ள அனைவருக்கும் மிகப் பெரிய சுமையாக அடுத்த 5 வருடங்களை முழுமையாக உள்ளீர்க்கப் போகின்றது.

நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சுமையிலிருந்து விடுபட முழு மூச்சாக ஈடுபட வேண்டிய தருணமிது. தனியொரு மனிதனுக்கு உணவில்லையேல்... என முழங்கிய எட்டயபுரத்து முண்டாசுக் கவிஞனின் அறைகூவல் இன்று வரை எமக்காகவும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

பட்டினியால் ஓருயிர் போகாதிருக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இது இப்பிறப்பின் தார்மீக கடமைகளிலொன்று.

உணவுற்பத்தியில் யார் ஈடுபடலாம் என்றொரு சந்தேகம் பலருக்கு எழுந்திருக்கின்றது. உண்ணுவதற்கு அனைவருக்கும் உணவு தேவையாயிருக்கும் போது அனைவரும் சேர்ந்து உணவுற்பத்தியில் ஈடுபடுவதற்கு என்ன தடை, என்ன குறை? அவரவருக்கு இருக்கும் இடவசதியைப் பொறுத்து நேர காலத்தைப் பொறுத்து இவ்வுற்பத்தியில் ஈடுபடலாம். இதற்கான எளிமையான அணுகுமுறையே மனைத் தோட்டம்.

நஞ்சற்ற உணவென்ற தளத்தில் இருந்து இதனை செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து முயற்சிக்கும் அணுகு முறையாகவே இதனைக் கருதலாம்.

மனைப் பொருளாதார




த்தை கட்டியெழுப்பி அதனை நிலை பேறானதாக தொடர்ந்து பேணுவதற்கான செயன்முறையாகவே மனைத் தோட்டத்தின் பயன்பாடு உணரப்பட்டிருக்கின்றது.

பல்வகைத்தன்மையான தாவரங்களை கிடைக்கின்ற இடவசதிக்கேற்ப வளர்த்து அதனை உணவாக கொள்கின்ற நிலைமையை இது எடுத்துணர்த்துகின்றது.

மனைத்தோட்டத்து உற்பத்தி மனைப்பொருளாதாரத்தை மேலுயர்த்தும் அரிய கைங்கரியம் என்றால் மிகையாகாது. பயிரிடப்படும் அனைத்தும் மனையின் உணவுத் தேவை தவிர்ந்த ஏனைய தேவைகளான கால்நடையுணவு, விறகு, நிழல், பசளை உற்பத்தி, இப்படிப்பட்ட இன்னோரன்ன பயன்பாடுகளுக்கு பயன்படுத்தக் கூடியதாக இருப்பதனால் அவற்றை ஒருங்கிணைத்துப் பார்த்தால் மனைப்பொருளாதாரத்திற்கு தேவையான நிதி வழங்கலை ஈட்டக் கூடியதாக இருக்கின்றது.

மனைத்தோட்டத்தில் இருக்கின்ற நிலம் மற்றும் இடை வெளிகளைப் பொறுத்து பயிர்களை தெரிவு செய்யலாம்.

நிழலில் வளரும் மரங்கள், செடிகள், கொடிகளுக்கு பயன்பாடு அதிகம். கிழங்கு அல்லது வள்ளி வகைகள் அனைத்தையும் மனைத் தோட்டத்தில் செழிப்புற வளர்க்கலாம்.

வீட்டிலுள்ள அனைவருக்குமாக அங்குள்ள வேலைகளனைத்தும் பிரிக்கப்பட்டு சுமுகமாக அனைத்தும் அனைவராலும் இலகுவாக செய்து முடிக்கப்படும்.

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

மனைத்தோட்டத்து உற்பத்தி தொடங்கி அங்கு கிடைக்கும் வருமானமனைத்தும் மனைப்பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்துவதுடன் பயிரிடும் பரப்பு அதிகமெனில் அதில் பலருக்கு வேலை வாய்ப்பினையும் பெற்றுக்கொடுக்கும் என நம்பலாம்.

தற்கால பொருளாதார நெருக்குவாரத்தினால் ஏற்பட்ட நலிவடைந்த பணப்புழக்கமும் எதிர்பாராத பொருட்களின் விலையதிகரிப்பும் பலருடைய வாழ்வாரத்தை தொடர்ந்தும் நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கின்றது.

கொவிட் 19 இனுடைய தாக்கத்திலிருந்து மீள்வதற்குள் நாட்டிலேற்பட்ட பொருளாதார நெருக்கடி அனைத்து வர்த்தகர்களையும் இன்னும் நுகர்வோர்களையும் கொடுக்கல் வாங்கல்களில் பாரிய பிரச்சனைக்கு முகங்கொடுக்க வைத்துள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போஷாக்கு குறைவான குழந்தைகள் தொடர்பில் விசேட வேலைத்திட்டம்

## கிளிநொச்சி அரச அதிபர்

(கண்டாவளை)

பாடசாலை மட்டங்களில் போஷாக்கு அச்சுறுத்தல்களுக்கு உள்ளான குழந்தைகள் அடையாளம் காணப்படுமிடத்து அதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்றாவது காலாண்டுக்கான மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக்கூட்டம், பெண்களுக்கெதிரான வன்முறை மற்றும் பூால்நிலை சமத்துவம் தொடர்பிலான கலந்துரையாடல்கள் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதியின் விசேட செயற்றிட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தேசிய வேலைத் திட்டங்களில் ஒன்றான உணவுப் பாதுகாப்பு தொடர்பான செயலணி உருவாக்கப்பட்டுஅதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

போஷாக்கு அச்சுறுத்தலான குழந்தைகள் தொடர்பில் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கான விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தயாராக உள்ளோம். அதிகரித்து செல்லும் போதைப்பொருள் பயன்பாடுகளைத் தடுப்பதற்கு அனைவரது ஒத்துழைப்புக்களும் அவசியமாகும்.

போதைப் பொருள் பாவனைகளில் இருந்து இளம் சமூகத்தை பாதுகாப்பதற்கு சட்டத்தால் மட்டும் முடியாது அனைவரது ஒத்துழைப்புகளும் அவசியமாகும் எனவும் மேலும் தெரிவித்தார். (4-315)



முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள விசுவமடு விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தின் 50 ஆவது ஆண்டு பொன் விழா நிகழ்வு நேற்றைய தினம் முல்லைத்தீவு விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:-யதுபாஸ்கரன், தேவானந்தன்)



யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் "சிங்கள டிப்ளோமா கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு" மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் கடந்த 24 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (படம்:ரவிசாந்)



ஆட்கடத்தல் மற்றும் மனித விற்பனை தொடர்பான சம்பவங்களை பொறுப்புடன் செய்தி அறிக்கையிடல் தொடர்பான ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் விடுதியில் இடம்பெற்றது. (படம்:சுபேசன்)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் ஒக்டோபர் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (4)



மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களம் மற்றும் வவுனியா மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்திய தொழிற்சந்தை நிகழ்வு வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று நடைபெற்றது. (படம்:சதீஸ்,வசந்தரூபன்)



சர்வதேச கடற்கரையை சுத்தப்படுத்தல் தினம் மற்றும் தேசிய கடல்சார் வளங்களைப் பாதுகாக்கும் வாரத்தினை முன்னிட்ட தேசிய ரீதியிலான வேலைத்திட்டத்தின் யாழ்ப்பாண மாவட்ட நிகழ்வின் பிரதான நிகழ்வு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை - யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் புங்குடுதீவு பிரதேச மருத்துவ மனைக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றது. (படம்:கஜிந்தன்)

## தப்பியோடிய கைதி மடக்கிப் பிடிப்பு

(வவுனியா)

வவுனியா நீதிமன்றில், நேற்று முன்தினம் கைதியாருவர் கூரை வழியாக தப்பிக்க முயற்சித்ததால், நீதிமன்ற வளாகம் சிறிது நேரம் பதற்றமாகக் காணப்பட்டது.

இருப்பினும் பொலிஸார் உடனடியாகத் துரிதமாகச் செயற்பட்டு, தப்பிக்க முயன்ற குறித்த கைதியினைக் கைது செய்தனர். (4)



தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியினால் முன்னாள் போராளிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:தேவானந்தன்)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ணச் சுற்றுப்போட்டி ஆரம்ப நிகழ்வு



(குப்பிழான்)

யாழ்.மாவட்டச் செயலக அரச அதிபர் வெற்றிக் கிண்ணச் சுற்றுப் போட்டி ஆரம்ப நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அரச அதிபர் வெற்றிக்கிண்ணச் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வான கரம் விளையாட்டு நிகழ்வு நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், மாவட்டச் செயலக கணக்காளரும் நலன்புரிச் சங்கத் தலைவருமான அ.நிர்மல், பிரதேச செயலாளர்கள், கொக்குவில் இந்துக் கல்லூரி [illegible]



பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை உடுத்துறையில் இடம்பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 101

### சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தினால் சாதிக்கலாம்

ஒரு மாணவன் முழு ஆண்டுத்தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் பெயில். தலைமை ஆசிரியருக்குக் கோபம் வந்துவிட்டது.

இந்தப் பள்ளியில் பத்து வருஷமா படிச்சிருக்க ஒரு பாடத்துல கூட பாசாகல. வகுப்புல பாடம் நடத்தும் போது நீ என்ன காதுல பஞ்சு வெச்சு அடைச்சுகிட்டிருந்தியான்னு கோபமாகத் திட்டினார்.

அந்தப் பையன் அமைதியாக நின்றிருந்தான். இனி நீ படிக்க லாயக்கே இல்லை என்று பாடசாலையை விட்டு அனுப்பி விட்டார். அந்தப் பையன் தெருவில் இறங்கி நடந்தான்.

உன் காதில் என்ன பஞ்சா அடைத்து வெச்சிருக்கே? என்ற அந்த வார்த்தை காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. உடனே தன் காதுகள் இரண்டையும் நன்றாக மூடினான்.

அமைதியான அந்த உலகம் அவனுக்கு வித்தியாசமாகத் தெரிந்தது. ஒரு புதிய சிந்தனை உருவானது. தலைமையாசிரியர் சொன்னது போல் பஞ்சு வைத்து காதை அடைத்துப் பார்த்தான்.

ஒரு புது சாதனத்தை வடிவமைத்தான். அதன் பெயர் இயர் மஃப் (Ear muff) பரீட்சைக்குப் படிக்கிறவர்கள் தொந்தரவின்றிப் படிக்க வாங்கினார்கள். இரைச்சலான இடங்களில் வேலை செய்பவர்கள் வாங்கினார்கள். ஓரளவுக்கு வியாபாரம் நடந்தது.

அந்தச் சமயம் முதலாம் உலகப்போர் ஆரம்பமானது. பீரங்கிச் சத்தத்தினால் காது செவிடாகாமல் தடுக்க இயர் மஃப் கட்டாயம் அணிய வேண்டும் என அதிகாரி உத்தரவிட்டார். போர்வீரர்களுக்கு வசதியாக ஹெல்மட்டில் வடிவமைத்துக் கொடுத்தான்.

கோடீஸ்வரனானான். அவர்தான் செஸ்டர் கிரீன் வுட்.சங்கடமான சூழ்நிலையில் கிடைத்த ஐடியாவை சரியான முறையில் பயன்படுத்தினால் எதையும் சாதிக்கலாம்.



**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## சிங்கப்பூர் பிரதமர்-ரணில் சந்திப்பு




(சிங்கப்பூர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கை நேற்று டோக்கியோவில் சந்தித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பது தொடர்பில் இந்த சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் பிரதமரிடம் விளக்கமளித்தார்.

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முன்னுரிமை வழங்குவதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

இதனை வரவேற்ற பிரதமர் லீ சியென் லூங், இலங்கையில் முதலீடு செய்ய சிங்கப்பூர் மீண்டும் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார்.

அடுத்த வருடம் இலங்கை 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட இருக்கும் நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சிங்கப்பூர் பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். (நி)

## தேர்தலில் வாக்குகளைப் பெற பணத்தை அள்ளி வீச முடியாது

### தேர்தல்கள் ஆணைக்குழு புதிய சட்டமூலம்

(கொழும்பு)

தேர்தல் பிரச்சார செலவுகளை திருத்துவதற்கான சட்டமூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அது தொடர்பான சட்டமூலத்திற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகள் மக்கள் வாக்குகளைப் பெறுவதற்காக செலவிடும் அதிகபடியான செலவுகளைக் கட்டுப்படுத்துவதே இந்தப் புதிய சட்டத்தின் நோக்கமாகும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் சட்ட வரைவுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபரின் ஒப்புதலைப் பெற்றுள்ளதாகவும் இந்த சட்டமூலத்தை சீர்திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட தேர்தல் சட்டங்கள் குறித்த பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவும் பரிந்துரைத்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இச்சட்டம் தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தவும் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தவும் தபால் மூலம் வாக்களிக்க தகுதியில்லாத ஆனால்



தேர்தல் நாளில் கடமையாற்றுபவர்களுக்கு வாக்களிக்கும் வசதியை ஏற்படுத்தவும் சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளுக்கான ஒழுக்க விதிகளை சட்டபூர்வமாக்குதல், தேர்தல் முறைப்பாடுகளை துரிதமாக தீர்ப்பதற்கு தேர்தல் நீதிமன்றத்தை நிறுவுதல் உள்ளிட்ட 7 விடயங்கள் இந்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி)

## இலங்கைக்கு உதவியளிக்க ஐ.நா உறுதி

### அன்டோனியோ குட்டரேஸ்



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரேஸை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நியூயோர்க்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார நிலை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான உதவிகளை அணிதிரட்டுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையால் ஆதரவு வழங்கப்படும் என அன்டோனியோ குட்டரேஸ் இதன்போது தெரிவித்துள்ளார (நி)

## பெற்றோல், டீசலின்

### தரம் தொடர்பில் பரிசோதனை

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் தரம் தொடர்பில் பரிசோதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பரிசோதனைக்கான மாதிரிகள் தற்போது சேகரிக்கப்பட்டு வருவதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

எரிபொருட்களின் தரம் குறித்து இதுவரை பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

## போதைப்பொருள் கடத்தலை தடுத்து நிறுத்த நடவடிக்கை

### பாதுகாப்புச் செயலாளர்

(கொழும்பு)

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் அதற்கு ஆதரவானவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்தார்.

மேலும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் போதைப்பொருள் கடத்தலை தடுத்து நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை சமூக வலைத்தளங்களை தவறான பிரசாரங்களுக்கு பயன்படுத்துவதை தடுக்கும் வகையில் சட்டத்தை கொண்டுவருவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக கமல் குணரத்ன தெரிவித்தார். பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சர்கள் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### பகைவனுக்கருள்வாய்!

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தின் மீதேறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் கீழே இறங்கி அவன் அவ்வுடலைச் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் செல்கையில் அதனுள் இருந்த வேதாளம் எள்ளி நகைத்து "மன்னனே! நீ மனம் தளராமல் விடாப்பிடியாக இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். ஒரு சிலர் தம் முயற்சியில் வெற்றி பெற்றாலும் அதன்பின் எவ்வாறு நடந்து செல்வார்களென்று சொல்ல முடியாது. இதற்கு உதாரணம் ஞானதீபன். அவன் கதையைக் கூறுகிறேன். கவனமாகக் கேள்" என்று சொல்லிக் கதையை ஆரம்பித்தது.

சூர்யபுரத்திலுள்ள பிரதீபனின் ஒரே மகன் ஞானதீபன். தந்தையும் மகனும் நற்குணங்கள் படைத்தவர்கள். ஞானதீபனுக்குத் தன் தந்தை என்றாலே உயிர். பிரதீபனுக்கு அறுபது வயதாகியது. அவனுக்கு ஒரு நாள் லேசாக மார்பு வலிக்கவே வைத்தியர்கள் வந்து பார்த்து விட்டு "இனி நீங்கள் பொறுப்பை எல்லாம் உங்கள் மகனிடம் ஒப்படைத்து விட்டு ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அதிக சிரமமோ கவலையோ படக்கூடாது" என்றனர்.



பிரதீபனும் வீட்டு நிர்வாகத்தை முழுவதுமாக ஞானதீபனிடம் ஒப்படைத்தான். ஞானதீபன் பொறுப்பேற்ற ஒரு வாரத்திற்கெல்லாம் ஜக்கு என்பவன் அவனிடம் "நான் உன் பெரியப்பாவின் மகன் ஜக்கு. உன் தந்தை என் தகப்பனாரை ஏமாற்றி என் குடும்பத்தையே அழிவுக்குக் கொண்டு வந்து விட்டார். இப்போது நான் யாருமில்லாத அநாதையாகி விட்டேன். இருக்க இடம் இல்லை. சாப்பாடு போடுவார் யாரும் இல்லை. எனக்கு வேறு எங்கும் போகப் புகலிடமும் இல்லை. அதனால் உன்னோடு என்னை நீ வைத்துக் கொள்ள வேண்டும்" என்றான்.

அதுகேட்டு ஞானதீபன் ஆச்சரியப்பட்டு "என் தந்தை ஒருக்காலும் இப்படிச் செய்திருக்க மாட்டார்" எனக் கூறவே ஜக்கு "இது பற்றி உன் தந்தையிடமே போய்க் கேட்கலாம் வா" என்றான்.

ஞானதீபனோ "வேண்டாம் என் தந்தை ஓர் இருதய நோயாளி. நீ ஏதாவது ஏடாகூடமாகப் பேசினால் அவர் உணர்ச்சிவசப்பட்டு விடுவார். அதனால் அவரது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு விடும்.

(தொடரும்)

## சிலப்பதிகாரம்

### வீதியே நீதிமன்றம், வீடே கொலைக்களம்




'இவன் சிலம்பைத் திருடியதே காவலர்களை மந்திரத்தில் அடக்கித்தான் என்கிறேன். நீங்கள் யோசிக்கிறீர்கள் இன்னும் சற்றுத் தாமதித்தால் அவன் மந்திரத்தில் நம்மைச் செயலிழக்க வைத்துவிட்டு ஓடிவிடுவான்.'

இந்தக் கடைசி கணை கச்சிதமாக வேலை செய்தது. கூடவே சேவகர்களில் ஒருவனும் பொற்கொல்லனுக்கு ஆதரவாகப் பேசினான்.

இவர் சொல்வது உண்மைதான். சில மாதங்களுக்கு முன்பு ஒருவன் அரண்மனையில் திருட வந்தான். அவனை வெட்டுவதற்காக நான் வாளை ஓங்கினேன். ஆனால் என் கையில் இருந்த வாளை அவன் எப்போது பறித்தான் என்றும் தெரியவில்லை. எப்போது ஓடினான் என்றும் தெரியவில்லை. ஓடினானா மறைந்து போனானா என்று கூடத் தெரியாது.

இதுமாதிரி சந்தர்ப்பங்களில் கொஞ்சம் நிஜமும் நிறையக் கற்பனையும் கலந்து சரடு விடுவது மனித இயல்பு. அந்தக் காவலன் சொன்னது எவ்வளவு தூரம் உண்மையோ, கடவுளுக்குதான் வெளிச்சம்.

இவர்கள் சொன்னதைக் கேட்டுக் கேட்டு அந்தப் பாதுகாப்பு அதிகாரி மிகவும் குழம்பிப்போயிருந்தார்.

'இப்போது என்ன செய்வது?'

'வேறு வழியே இல்லை உடனடியாக நாம் இவனைத் தண்டிக்க வேண்டும். இல்லாவிட்டால் அரசர் நம்மைத் தண்டித்து விடுவார்.' இவர்களுடைய பதற்றம் இன்னொரு சேவகனைப் பற்றிக்கொண்டது.

அவன் ஒரு குடிகாரன். எப்போதும் கள் மயக்கத்திலேயே இருப்பவன். மூளை உறங்கிக் கொண்டிருக்க அவனுடைய அனிச்சைச் செயல்கள் மட்டுமே ஆக்கத்தில் இருந்தன.

ஆமாம், இனி தாமதிக்கக் கூடாது என்று சொன்ன அவன் தன்னுடைய வாளை உருவினான்.

தலையில் ஒரே வெட்டு தலை துண்டாக கோவலன் இறந்து போனான்.

ஏறக்குறைய அதே நேரம் கண்ணகி தங்கியிருந்த வீட்டில் ஐயை பதறினாள். 'ஏதோ தவறு நடக்கப் போகிறது' என்றாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையில் துவாரமிருந்தால் அதில் பணத்தை நிரப்பிப் பலனில்லை.
- ஜார்ஜ் எலியட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஏழை மக்களுக்கு உதவி செய்யுங்கள்

பொருளாதார நெருக்கடி ஏற்படுத்தியுள்ள சுமையைத் தாங்கிக் கொள்ள முடியாத அவலத்தில் ஏழை மக்கள் தத்தளித்து நிற்கின்றனர்.

முன்பெல்லாம் பசி என்றால் பாண் வாங்கிச் சாப்பிடலாம் என்று நினைத்த காலம் உண்டு.

ஆனால் இப்போது ஒரு இறாத்தல் பாண்ின் விலை இருநூறு ரூபாயானபோது பாண் பணக்காரர்களின் பண்டமாயிற்று.

உண்மை. முன்பு இழிவுப் பண்டமாக இருந்த பாண் இன்று பணக்கார வர்க்கத்தின் உணவுப் பொருளாக மாறிவிட்டதுதான் மிகப் பெரும் ஆச்சரியம்.

ஆம், சந்திரிகா குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது ஒரு இறாத்தல் பாணின் விலை மூன்று ரூபாயாக இருந்தது என நாம் கூறினால், அதனை நம்ப முடியுமா என்ன?

மூன்று ரூபாயுக்கு ஒரு இறாத்தல் பாணை வாங்கக் கூடியதாக இருந்தபோது, ஏழை மக்கள் பசி அறியாமல் வாழ்ந்தனர்.

ஆனால் இன்று நிலைமை படுமோசமாயிற்று.

இதுதவிர, சிற்றுண்டிகளின் விலை சொல்லிமாளா. ஒவ்வொரு உணவுச்சாலை உரிமையாளர்களும் தாம் நினைத்தவாறு சிற்றுண்டிகளுக்கு விலை நிர்ணயம் செய்கின்றனர்.

பொதுவில் தனித்து வாழ்பவர்களும் இரண்டு மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களும் சாப்பாட்டுக் கடைகளில் உணவைப் பெற்றுக் கொள்வதை வழமையாக்கியிருந்தனர்.

சமைப்பதைவிட, சாப்பாட்டுக்கடைகளில் உணவைப் பெற்றுக் கொள்வது பரவாயில்லை என்ற அடிப்படையில் சீவியம் நடத்தியவர்களின் பாடு இப்போது அம்போ என்றாயிற்று.

அதிலும் ஒற்றை ஆளாகத் தனித்து வாழ்கின்றவர்களின் நிலைமை சொல்லிமாளா.

அதிலும் தனித்து வாழ்பவர் அடிப்படை வசதியற்றவராக இருந்தால், அவரின் நிலைமை எப்படியாக இருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கும்போதுதான் வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும். இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம் என்ற பாரதியின் ஆதங்கத்தை உணர முடிகிறது.

ஆம், அன்புக்குரிய மக்களே! இன்றைய பொருளாதார நெருக்கடியால் ஏழை மக்கள் ஒருநேர உணவுக்கும் அல்லாடுகின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

எனவே ஏழை மக்களின் சீவனோபாயத்துக்கும் அவர்களின் வாழ்வியலுக்கும் உதவ வேண்டிய தார்மீகக் கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

• ஆக, ஏழை மக்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நிதி உதவி செய்வது. உலர் உணவுப் பொருட்களை வழங்குவது. தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுப்பது என இன்னோரன்ன விடயங்களை நாம் செய்தாக வேண்டும்.

அதிலும் குறிப்பாக எங்கள் புலம்பெயர் உறவுகளும் வசதி வாய்ப்புக் கொண்ட ஆலயங்களும் பரோபகாரிகளும் இதுவிடயத்தில் கருணை கொண்டு ஈடுபட்டால் எங்கள் மண்ணில் ஏழை மக்களின் பசியை நிச்சயம் ஆற்ற முடியும்.

## யாழ். மாநகர ஆணையாளர் எதேச்சையாக முடிவெடுத்ததை கண்டித்து

### சபை உறுப்பினர்கள் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையில் சபை நடவடிக்கைகளில் சபை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தாமல் நடந்த சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணன் அணி உறுப்பினர்களைத் தவிர ஏனைய சகல உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தெரியாமல் ஆணையாளர் எதேச்சையாக ஒரு கோடியே 43 லட்சத்து 26 ஆயிரத்து 466 ரூபா தொடர்பில் முடிவெடுத்தமையைக் கண்டித்த சபை உறுப்பினர்கள் சிலர் ஆணையாளர் தவறை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினர். எனினும் சுமார் ஒன்றரை மணித்தியாலங்களாக ஆணையாளர் தவறை ஏற்றுக் கொள்ளவில்லை. ஜப்பானியத் தூதரகத்தினால் அனுப்பப்பட்ட வரைபின் படியே ஆணையாளர் கடிதத்தில் கையொப்பமிட்டார் என முதல்வர் தெரிவித்தார். இதனைப் பரிகசித்த உறுப்பினர்கள் ஆணையாளர் யாழ்ப்பாண மாநகர சபைக்கு ஆணையாளரா? அல்லது ஜப்பானிய மாநகர சபைக்கு ஆணையாளரா? எனக் கேள்வி எழுப்பினர்.

தொடர்ந்து வாக்கு வாதங்கள் இடம்பெற்ற போதும் உறுப்பினர்கள் கோரியபடி ஆணையாளர் மற்றும் முதல்வர் தவறை ஏற்றுக்கொள்ளாததனால், அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

இவ்வாறு உறுப்பினர்கள் வெளியேறியதையடுத்து சபை அமர்வும் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஜப்பானியத் தூதரகத்தினால் அன்பளிப்புச் செய்யப்படவிருந்த நவீன திண்மக் கழிவகற்றல் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக அவ்வாகனங்களின் தீர்வை மற்றும் இதர செலவுகளுக்காக ஜப்பானியத் தூதரகத்தினால் யாழ். மாநகர சபைக்கு வழங்கப்பட்ட ரூபா ஒரு கோடியே 43 லட்சத்து 26 ஆயிரத்து 466 ஐத் திரும்பச் செலுத்துவது தொடர்பில், மாநகர சபைக்குத் தெரியப்படுத்தாமல் "பணத்தைத் திரும்பச் செலுத்த முடிவு செய்துள்ளோம்" என சபை சார்பில் ஆணையாளர் அனுப்பிய கடிதம் தொடர்பான சர்ச்சையை அடுத்து உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தாமல் மூடுமந்திரமாக சபை நடாத்தப்படுவதைக் கண்டித்து, ஆணையாளர் சபையில் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தியுமே உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

(ம-7,33)

## தொல்புரத்தில் தனிமையில் வசித்த பெண் மீது தாக்குதல்

### நகைகளும் கொள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரம் பகுதியில் தனிமையில் வசித்த பெண்ணொருவரின் வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இருவர் தாக்கியதோடு பெண்ணின் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர் என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் வீட்டில் தனிமையில் வசித்து வரும் நிலையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இருவர் வீட்டின் வளாகத்தினுள் பொருத்தப்பட்டு இருந்த சிசிரிவி கமராக்களை உடைத்து சேதப்படுத்திய பின்னர், வீட்டின் பிரதான கதவினை சேதப்படுத்தி வீட்டினுள் அத்துமீறி நுழைந்து பெண் மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது, நகைகளும் கொள்ளையடித்து செல்லப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில், இரு குடும்பங்களுக்கு இடையிலான தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே பெண்ணின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பொலிஸ் தரப்பு தெரிவிக்கிறது. (ம-7,18,104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** கார்கில்ஸ் பூட்சிற்றி, கன்னாதிட்டி, மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, செலிங்கோ, மெஹறாமோல், ஏ.வி.வீதி கொழும்புத்துறை, கொழும்புத்துறை, கன்னாதிட்டி கஸ்தூரியார் வீதி,நாவலர் வீதி சந்தி மணியந்தோட்டம், நாவலர் வீதி, மணிக் கூட்டுக் கோபுர வீதி, நீராவியடி, பழைய பூங்கா வீதி, பாசையூர், ஈச்ச மோட்டை, பெரிய கோவில், புங்கங்குளம், உதயபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

## வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கு ஓய்வூதியம்

(கொழும்பு)

வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கை தொழிலாளர்களுக்கு புதிய ஓய்வூதிய முறை அறிமுகப்படுத்தப்படும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

18 முதல் 59 வயதுக்குட்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு "மனுசவி" என்ற ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுசவி ஓய்வூதியத் திட்டத்தில் பயனடைவதற்கு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டுத் தொழிலுக்காக சென்றிருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (ம-7)

## பாவனைக்கு தகுதியற்ற சீனியுடன் இருவர் கைது

(கொழும்பு)

மனித பாவனைக்கு தகுதியற்ற சீனியுடன் இரண்டு சந்தேகநபர்கள் பேலியகொடையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கொனஹேன முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் 3,000 கிலோ எடையுடைய சீனியை பாவனைக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

குறித்த களஞ்சியசாலையில் இருந்த 41 மற்றும் 48 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களும் சீனி கையிருப்பும் மேலதிக விசாரணைகளுக்காக பேலியகொட பொது சுகாதார பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(ம-7)

## சுற்றுலாத்துறையை உருவாக்க இளைஞர்களின் பங்கை நிராகரிக்க முடியாது

(கொழும்பு)

நிலையான சுற்றுலாத் துறையை உருவாக்க இளைஞர்களின் பங்கை நிராகரிக்க முடியாது என UNICEF மற்றும் UN வதிவிடப் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவன கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற பிரதான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இளைஞர்களைக் கருத்தில் கொள்ளாமல் திட்டங்களையும் கொள்கைகளையும் உருவாக்குவது பயனற்ற விடயம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 86

"செர்வெண்ட் ஓஃப் தி பீப்பிள்" தொடரில் அவர் ஒரு சாதாரண வரலாற்று ஆசிரியராக நடித்தார். ஊழலுக்கு எதிராக அவர் பேசிய வீடியோ ஒன்லைனில் வைரலான பிறகு அவர் அந்தத் தொடரில் ஜனாதிபதியாக நடித்தார். இது ஒரு மாறுபட்ட கதையாக இருந்தது. இது அரசியலில் ஏமாற்றத்தை கண்டிருந்த உக்ரைனியர்களுக்கு மிகவும் பிடித்துப்போனது.

மக்களின் சேவகர் அவரது கட்சியின் பெயரானது. வோலோடிமிர் ஜெலென்ஸ்கி அரசியலைத் தூய்மைப்படுத்துவதாகவும் கிழக்கில் அமைதியைக் கொண்டுவருவதாகவும் உறுதியளிக்கும் பிரசாரத்தை மேற்கொண்டார்.

இப்போது ரஷ்யாவின் துருப்புக்கள் உக்ரைனுக்குள் புகுந்து தாக்கி வரும் நிலையில் இந்த தேசியத் தலைவர். சர்வதேச நெருக்கடியின் மையத்தில் இருக்கிறார். இது மேற்கத்தேய நாடுகளின் ரஷ்யாவுடனான பனிப்போரின் ஆழமான நெருக்கடியை நினைவுபடுத்துகிறது.

44 வயதான ஜனாதிபதி உக்ரைன் நலனுக்காக ஆதரவைத் திரட்டியும் பீதியை பரப்ப வேண்டாம் என்றும் மேற்கத்தேய நாடுகளிடம் வேண்டுகோள்விடுத்தும் மக்களிடையே அச்சம் பரவாமல் இருக்க தன்னால் இயன்றதை செய்தும் ஒரு கடினமான பாதையில் செல்ல வேண்டியுள்ளது.

### ஒரு நகைச்சுவை நடிகரின் அழைப்பு

ஜனாதிபதி பதவிக்கான அவரது பாதை வழக்கமான ஒன்றல்ல. மத்திய நகரமான க்ரைவிரியில் யூத பெற்றோருக்கு பிறந்த வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, கீவ் தேசிய பொருளாதார பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டம் பெற்றார். இருப்பினும், நகைச்சுவைதான் அவரது தொழிலாக மாறியது.

ஒரு இளைஞராக அவர் ரஷ்ய தொலைக்காட்சியில் ஒரு போட்டிக் குழு நகைச்சுவை நிகழ்ச்சியில் பங்கேற்றார். 2003 ஆம் ஆண்டில், அவர் தனது நகைச்சுவைக் குழுவான "க்வார்டல் 95" என்ற பெயரில் ஒரு வெற்றிகரமான தொலைக்காட்சி தயாரிப்பு நிறுவனத்தின் இணை நிறுவுநர் ஆனார்.

இந்த நிறுவனம் உக்ரைனின் 1+1 நெட்வொர்க்கிற்கான நிகழ்ச்சிகளை தயாரித்தது. அதன் சர்ச்சைக்குரிய பில்லியனர் உரிமையாளர் இஹோர் கொலோமோய்ஸ்கி, பின்னர் ஜெலென்ஸ்கியின் ஜனாதிபதியாகும் முயற்சியை ஆதரித்தார்.

2010 களின் நடுப்பகுதி வரை, டிவி மற்றும் லவ் இன் தி பிக் சிட்டி (2009) மற்றும் ர்ஜெவ்ஸ்கி வெர்சஸ் நெப்போலியன் (2012) போன்ற திரைபடங்கள் தான் அவரது வாழ்க்கையின் மையமாக இருந்தன.

### செர்வெண்ட் ஓஃப் தி பீப்பிள் தொலைக்காட்சி தொடர்

ஜெலென்ஸ்கியின் அரசியல் எழுச்சிக்கான களம் 2014 இல் நடந்த கொந்தளிப்பான நிகழ்வுகளால் அமைக்கப்பட்டது. உக்ரைனின் ரஷ்ய சார்பு ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் பல மாத எதிர்ப்புகளுக்குப் பிறகு வெளியேற்றப்பட்டார். பின்னர் ரஷ்யா கிரிமியாவைக் கைப்பற்றியது. கிழக்கில் உக்ரைனுடனான போரில் பிரிவினைவாதிகளை ஆதரித்தது. இன்றுவரை அந்த சண்டை தொடர்கிறது.

ஒரு ஆண்டு கழித்து, 2015 ஒக்டோபரில் "சர்வண்ட் ஓஃப் தி பீப்பிள்" தொலைக்காட்சி தொடர், 1+1 இல் ஒளிபரப்பானது. அவர் வாசிலி கோலோபோரோட்கோ என்ற கதா பாத்திரத்தில் நடித்தார். இந்த கதா பாத்திரம் நாட்டின் ஜனாதிபதியானது போலவே, நடிகரின் நிஜவாழ்க்கையும் அமைந்தது.

அவர் அப்போதைய ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோவை தோற்கடித்தார். பெட்ரோ தனது போட்டியாளரை "அரசியலில் புதியவர்" என்று சித்தரிக்க முயன்றார். ஆனால் வாக்காளர்கள் அதை அவருடைய வலுவாக நினைத்தனர்.

அவர் 73.2% அமோக வாக்குகளுடன் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டார். உக்ரைனின் ஆறாவது ஜனாதிபதியாக 2019 மே 20 ஆம் திகதி அவர் பதவியேற்றார்.

### டான்பாஸில் முட்டுக்கட்டை

கிழக்கு உக்ரேனில் 14.000 க்கும் மேற்பட்ட மக்களின் உயிரை பலிகொண்ட மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதாக அவர் அளித்த வாக்குறுதியின்படி செயற்பட முயன்றார்.முதலில், அவர் சமரசத்திற்கு முயற்சித்தார். ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தைகள், கைதிகளின் பரஸ்பர பரிமாற்றம் மற்றும் மின்ஸ்க் உடன்படிக்கை என அழைக்கப்படும் சமாதான செயல்முறையின் சில பகுதிகளை செயற்படுத்துவதற்கான நகர்வுகள் இதில் அடங்கும். (தொடரும்)

# முதல் தடவையாக தேசியபேரவை நாளை கூடுகிறது-சபாநாயகர்



(கொழும்பு)

தேசிய பேரவை நாளை வியாழக்கிழமை முதல் தடவையாக கூடவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சபைக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அண்மையில் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப் பட்டன.

சபாநாயகர் தேசிய சபையின் தலைவராக செயற்படுவார் என்றும் பிரதமர், அவைத்தலைவர், எதிர்க்கட்சி தலைவர் ,அரசாங்கக்கட்சியின் பிரதம அமைப்பாளர் ஆகியோருடன் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த தேசிய சபையில் செயற்படுவார்கள் என்றும் சபாநாயகர் அறிவித்துள்ளார்.

இதன்படி, டக்ளஸ் தேவானந்தா, நஸீர் அஹமட், சிசிர ஜெயகொடி டிரான் அலஸ், சிவநேசத்துரை சந்திரகாந்தன், ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பவித்ரா வன்னியாராச்சி, வஜிர அபேவர்த்தன, ஏ.எல்.எம் அத்தாவுல் லாஹ், திஸ்ஸ விதாரன, ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், விமல் வீரவன்ச,உதய கம்மன்பில, பழனி திகாம்பரம், மனோ கணேசன், ரோஹித்த அபேகுணவர்த்தன, நாமல் ராஜபக்ஷ, அலி சப்ரி ரஹீம், ஜீவன் தொண்டமான், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அத்துர லியேரத்தன தேரர், அசங்க நவரட்ன, சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் இந்த சபையில் செயற்படுவார்கள் என்று சபாநாயகர் அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் டலஸ் அழகப்பெரும அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# சடுதியாக வீழ்ச்சியடையும் வாகனங்களின் விலை

(கொழும்பு)

நாட்டில் தற்போது வாகனங்களின் விலைகள் சடுதியாக குறைவடைந்து வருவதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளால் வாகனங்களின் இறக்குமதி தடைப்பட்டு இருந்தது. இதனால் அதன் விலைகள் பலமடங்கு அதிகரித்தன.

இந்நிலையில் தற்போது வாகனத்தின் வட்டி வீதம் அதிகரித்தமை, எரிபொருள் விலை உயர்வு மற்றும் உதிரிப்பாகங்களுக்கான தட்டுப்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகள் காரணமாக வாகனங்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரென்ஜிகே தெரிவித்துள்ளார்.

எனினும், வாகனங்களின் விலை குறைவடைந்த போதிலும் உதிரிப்பாகங்கள், வாகன திருத்தல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய கட்டணங்கள் சடுதியாக அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 280 | 350 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 240 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 300 |
| தக்காளி | 250 | 220 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 250 | 200 |
| கோவா | 400 | 400 | 300 | 450 |
| கரட் | 300 | 400 | 380 | 450 |
| பூசணி | 200 | 140 | 120 | 200 |
| புடோல் | 240 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 160 | 120 | 140 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 800 | 800 | 800 | 700 |
| வெண்டக்காய் | 180 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 250 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 250 |
| லீக்ஸ் | 280 | 280 | 300 | 350 |
| பீற்றூட் | 260 | 250 | 180 | 300 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 400 | 400 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 280 | 280 |
| கீரை - 1 பிடி | 150 | 80 | 100 | 150 |
| தேசிக்காய் | 350 | 400 | 350 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 220 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 400 |
| முள்ளங்கி | 120 | 200 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 80 | — | 100 | 80 |
| வல்லாரை | 30 | 20 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | 120 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் வெட்டு...

நிலையத்தின் 3 மின் பிறப்பாக்கிகளில் ஒரு மின் பிறப்பாக்கி திருத்தப் பணிகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், 900 மெகாவாட் மின்சாரத்தை விநியோகித்த நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில், தற்போது 300 மெகாவாட் மின்சாரத்தை பிறப்பிக்கும் ஒரு மின் பிறப்பாக்கி மாத்திரமே செயற்படுகின்றது. (ம-7)

## ஏற்றுமதி...

துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் 1,213.7 மில்லியனாக பதிவாகியுள்ளது.

இதில் ஆடை ஏற்றுமதி பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## உணவுப்...

நிறுவனங்களுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி சிண்டி மெக்கெய்ன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை விவசாய அமைச்சில் சந்தித்தார். இதன்போது, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கும் பங்கேற்றார்.

இதற்கிடையில், சின்டி மெக்கெய்ன் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஆகியோர் நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் அருணி விஜேவர்தனையும் சந்தித்தனர்.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இதன்போது தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்கைக்கு...

நாணய நிதியத்தின் திட்டம் நிறைவடைந்த பின்னர், இலங்கைக்கான கூடுதல் நிதி ஆதாரங்களை வழங்குவது தொடர்பில் ஆராயவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உணவுக்கான உதவியை உறுதி செய்வதற்கும் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் 200 மில்லியன் டொலர் அவசரக் கடனுக்கான உடன்படிக்கையில் அண்மையில் ஆசிய அபிவிருத்தி வங்கி கைச்சாத்திட்டது. (ம-7)

## வடக்கு மீனவர்...

வடக்கு மாகாண கடற்றொழில் இணையமும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணை தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

தற்போதைய மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை தொடர்பாக இந்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறும் விதமாக குறித்த கருத்துரையாடல் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம் பெற்றது.

இந்திய இழுவை மடித் தொழிலினால் வடக்கு பகுதி மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக இந்திய முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடுவதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டதாக கடற்றொழில் இணையத்தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

இதற்கு இந்திய துணை தூதுவர் அனுமதி பெற்று தருவதாக தெரிவித்ததாக குறிப்பிட்டார். (ம-7,18,33,104)

## சட்டம் மூலம்...

நேரடி விளைவாக, சர்வதேச சமூகத்தின் முன்பாக இலங்கை சிக்கலில் மாட்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இந்த செயற்பாடுகளுக்கு எதிராக எதிர்க்கட்சி தரப்பில் இருந்து அதிகபட்ச முயற்சியுடன் செயற்படுவேன் என கூறியுள்ளார்.

நாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப் படுத்தியமை மூலம் சுற்றுலா பயணிகள் கூட வரமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாக ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அடக்குமுறைகள் அனைத்தும் மக்களை வாயடைக்கச் செய்யப்படுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை நாட்டில் நிலவும் போசாக்கு குறைபாடு, உணவு, மருந்து தட்டுப்பாடு குறித்த தகவல்களை வெளியிடும் அதிகாரிகளை கூட விசாரணை என கூறி அழைத்து வந்து மிரட்டுவதாகவும் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## நெருக்கடி...

ள்ளது. இதனை நாம் எதிர்கொள்ளும் வகையில் வியூகங்களை வகுக்க வேண்டும்."

"எதிரணியினர் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தால் அதனை நாம் பரிசீலிக்க முடியும். ஆனால், அவர்களின் கோரிக்கைகள் நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் உள்ளன.

ஆட்சி மாற்றத்தைக் கோரும் அவர்களிடம் மாற்று வழி எதுவும் இல்லை. பாராளுமன்றத்தில் ஒரு ஜனாதிபதியையோ அல்லது பிரதமரையோ தெரிவு செய்யும் பலம் எதிரணியிடம் இல்லை.

இவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தால் நாடு பேரழிவைத்தான் சந்திக்கும்.

தேர்தல்களை அதற்குரிய காலங்களில்தான் நடத்த முடியும். எதிரணியினர் விரும்புவது போல் தேர்தல்களை நடத்த முடியாது.

தற்போதைய நிலைமையில் பல சவால்களை எதிர்கொள்வேன் என்று தெரிந்துகொண்டுதான் ஆரம்பத்தில் பிரதமர் பதவியையும், அதன்பின்னர் ஜனாதிபதி பதவியையும் பொறுப்பேற்றேன்.

முன்வைத்த காலை நான் ஒருபோதும் பின்வைக்க மாட்டேன். நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு கண்டே தீருவேன்" என்றார். (ம-7)

## அரசி...

ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரயே, எல். டி.பி. தெஹிதெனிய விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் ஐவரடங்கிய குழாம் முன்னிலையில் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதன்போதே, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில் புள்ளே குறித்த விடயத்தை அறிவித்தார். (ம-7)

## பஞ்ச...

ஏப்ரல் மாதம் மக்களால் முன்னெடுக்கப்பட்டதை விட மோசமான ஒரு போராட்டம் அண்மையில் முன்னெடுக்கப்படுமெனவும் வன்முறைகள் நாட்டில் அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இன்று எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு சர்வதேச நாடுகளிடம் கடன் கோருவது தீர்வாகாது.

# தங்கம் கடத்திய அதிகாரி கைது

எட்டு தங்க கட்டிகளை கடத்த முயன்ற விமான நிலையத்தின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர், சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று பிற்பகல் வெளியேறும்போது அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து, கைப்பற்ற தங்கத்தின் மொத்த எடை ஒரு கிலோகிராம் என்றும், அவற்றின் பெறுமதி 2 கோடி ரூபாய் என்றும் சுங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (ம-7)

டங்களின் நிமித்தம் இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து போராட்டங்களை முன்னெடுக்கும் போது அவர்களை அடக்க முயற்சிப்பதும் நெருக்கடிகளுக்கு தீர்வாகாது என்றார். (ம-7)

## சமூக வலைத்த...

எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் நேற்று இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்தாபனக் குறியீட்டின் பிரிவுகளின் 6 மற்றும் 7ஆம் அத்தியாயங்களின் விதிகளைப் பின்பற்றாமல் சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளியிடும் பொது அதிகாரிகள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2022/09/27
சீட்டிழுப்பு இலக்கம் 4891
Z 8 5 8 9 0 4
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.09.27
சீட்டிழுப்பு இலக்கம் 200
விருச்சிகம் 05 09 34 48 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1239
O 23 01 02 19 20

கொவிசெத
திகதி 2022.09.27
சீட்டிழுப்பு இலக்கம் 3133
J 22 47 49 79
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.09.27
சீட்டிழுப்பு இலக்கம் - 921
A 06 30 45 78

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1346
விருச்சிகம் 0 7 4 6 7 6
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1692
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.09.27
ரூ. 3,995,160/-
48 50 55 75 C

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.09.27
சீட்டிழுப்பு இல: 4027
வர்ணம்: இள நீலம்
ரூ. 3,421,080/-
வெற்றி இலக்கங்கள் 03 19 38 61 B

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1866
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.09.27
தினம் செவ்வாய்க்கிழமை
V 13 38 48 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,727,140/-

சசிரி
சீட்டிழுப்பு 228
சீட்டிழுப்பு திகதி 2022.09.27
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 11 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,050,920/-

ராசி
ரூ. 2,974,927.60
வெற்றி இலக்கங்கள் 01 08 34 41
திகதி 2022-09-27
வெற்றி வாரம் 3578
வர்ணம் சிவப்பு
ரூ. 11,333,467.60

26
A 28 19 42 46 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 263,869,813/-
1042
2022.09.27 செவ்வாய்க்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடங்கள்

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட எமது **WEC** நிறுவனத்தின் வட மாகாண கிளை நிறுவனங்களுக்கு வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளது. தரம் 10, O/L, A/L படித்த அனுபவம் உள்ள, அனுபவமற்ற இளைஞர், யுவதிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். **அடிப்படைச் சம்பளம் நிரந்தர வேலை மற்றும் EPF, ETF** போன்ற சலுகை பெற்றுக்கொள்ள முடியும். தகுதிகாண் காலத்தின்போது **25000** தொடக்கம் **45000** மாத வருமானம் பெற முடியும். **வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும்.** முற்பதிவுகளுக்கு **077 9858580** என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும்.

தொடர்புகளுக்கு:- **021 722 3317**
**076 853 8820, 077 202 5118** (12920)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - **077 679 6623** (12921)

## காணி விற்பனைக்கு

ஊரெழுவில் 1 பரப்பு 6 குழி பலாலி வீதியிலிருந்து 200 M தூரத்தில் விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 221 7883** (C-4994)

## வீடு விற்பனைக்கு

விதானையார் வீதி சுண்டிக்குளி பகுதியில் 3¾ பரப்பளவு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
**வி.திருலிகரன்**
**070 217 2973** (C-4995)

## அலுவலக உதவியாளர் (Clerk) தேவை

தனியார் கல்வி நிலையத்திற்கு அலுவலக உதவியாளர்கள் (பெண்கள்) தேவை.
யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள். (12923)

தொடர்புகளுக்கு:- **நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 077 459 8440

## கிழவன்காடு கலாமன்றம்
### யாழ்கிளை
### கலை வகுப்புகளுக்கான நாள் வகுப்பும் அனுமதியும்
### விஜயதசமி நாள்

எமது கலாமன்றத்தில் நடைபெற்று வரும் **அறநெறி, பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், வீணை, ஒகன், சித்திரம்** போன்ற கலை வகுப்புக்களுக்கான நாள் வகுப்பும் அனுமதியும் எதிர் வரும் 05.10.2022 ஆம் திகதி புதன்கிழமை (விஜய தசமி அன்று) பி.ப 5.00 மணிக்கு நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் இணைந்துகொள்ள முடியும்.

**பதிவாளர்**
**கிழவன்காடு கலாமன்றம்**
**யாழ்கிளை**
**இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**(வண்ணை சிவன் கோவில் அருகாமை)**
**தொ.பே. இல. : 077 578 6638** (C-4993)

## ஷின்சே அபேயின் இறுதிச் சடங்கில் ஜனாதிபதி ரணில்



(ரோக்கியோ)

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கு நேற்று ரோக்கியோவிலுள்ள நிப்பொன் புடோக்கனில் அரச மரியாதையுடன் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது ஜனாதிபதியுடன் அவரது பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார். (ம-7)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில்**
**12 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியில் இருந்து 750M தூரத்தில்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- 20 அடிப் பாதையுடன்

(12924)

**077 623 4204**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில்**
**10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12924)

தொடர்புகளுக்கு:- **077 288 0152**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- மல்லாகம் சந்தியிலிருந்து பலாலி விமான நிலையம் செல்லும் பிரதான காபற் வீதிக்கு அருகாமையில்
- தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 750m தூரத்தில்
- K.K.S வீதியில் இருந்து 1Km தூரத்தில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(12924)

தொடர்பு
**077 148 8348, 076 755 8606**

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாமதி அமிர்தகுமார்

(ஆசிரியை - அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 13.09.1970 | 28.09.2014 |

இறைவன் பாதத்தில்
வாடாத மலராகி
எம் நெஞ்சை விட்டு அகலாது
என்றென்றும்
எங்கள் வானத்தில்
ஒளி மின்னும்
நேசத் தாரகையே

ஆண்கேள் எட்டுப் போகும்
அகிலமும் உருண்டு போகும்
ஆயினும் உந்தன் அன்பு
அழியுமா எம் நினைவில்

**தங்கள் ஆத்மா சாந்தியடைய நாராயணன் பாதங்களை வேண்டி வணங்குகிறோம்.**

என்றும் உம் நினைவில்

**குடும்பத்தினர்**
பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.

(12916)

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்.நகரை அண்டிய சிற்றுண்டிச்சாலைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) (12922)

**077 275 9799**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

VISA
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். / V2 TRAVELS
**0777-068-777**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை (C-4921)
விசா சேவைகள் | V2 TRAVELS

- பயிற்சிக்கால கொடுப்பனவு 30,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் 35,000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். **0777-068-777**

## இலவச விசா வாய்ப்பு

அமெரிக்க லொத்தர் விசா

அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4921)

!!அலட்சியம் வேண்டாம்!! **October 05** பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் நூறுபத்திரருக்கு இரண்டு வாய்ப்புக்கள் PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

**V2 TRAVELS** 0768226244 0768226340

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org